Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.77/2019

Dated 27-11-2025
Deposition of witness for : PW 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்மணி | வயது | : | 42 |
| தந்தை பெயர் | : | கலியபெருமாள் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | அரசு மருத்துவர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**A5, 6 absent 355 BNSS Petition filed and allowed. And all other Accused present**

Ld. Defense **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரிமருத்துவமணையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

2) இதே துறையில் கடந்த 19.1.2018 அன்று பணியில் இருந்தபோது தஞ்சாவூர் தாலுக்காக காவல் நிலைய கு.எண்.18/2018 வழக்கில் தொடர்புடைய சுமார் 30 வயது மதிக்கதக்க அப்பு என்ற ஜெயகாந்தன் இறந்த உடலின் மீது பிரேத பரிசோதனை செய்வதற்காக காவல் ஆய்வாளரின்

வேண்டுகோள் கடிதத்தை காலை 11.40 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு ராஜு அவர்களிடம் பெற்றேன்.

3) பின்னர் அவர் சுமார் 30 வயது மதிக்கதக்க அப்பு என்ற ஜெயகாந்தன் இறந்த உடலை எனக்கு அடையாளம் காட்டினார். நான் காலை 11.50 மணியளவில் இந்த உடல் மீது உடற்கூராய்வு பரிசோதனையை ஆரம்பித்தேன்.

4) நான் அந்த பிரேதத்தை பார்த்தபோது அந்த பிரேதம் நல்ல உடல் வாகுடன் உடல் முழுவதும் மரண விரைப்பு தன்மையுடன் கை கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது. காய்ந்த உறைந்த ரத்தம் உடலின் முகம், கழுத்து , நெஞ்சு பகுதி வயிற்றின் இடது பகுதி ஆகியவற்றில் காணப்பட்டது-

5) கீழ்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெளிபுற காயங்கள் காணப்பட்டன.

1) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 22செ.மீ.x1 செ.மீ. மூளை வரையிலான ஆழத்தில் தலையில் இடது முன் பக்க வாட்டு தலை பகுதியில் காணப்பட்டது. இந்த வெட்டு காயம் அதன் கீழ் உள்ள தசைகள் தலை எலும்புகள்மற்றும்மூளையை வெட்டி இருந்தது.

2)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 7செ.மீ.x1 செ.மீ. எலும்பு வரையிலான ஆழத்தில் உச்சந்தலையில் காணப்பட்டது.

3) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 22செ.மீ.x1 செ.மீ. மூளை வரையிலான ஆழத்தில் இடது முன் பக்க வாட்டு தலை பகுதியில் காணப்பட்டது. இந்த வெட்டு காயம் அதன் கீழ் உள்ள தசைகள் தலை எலும்புகள் மற்றும் மூளையை வெட்டி இருந்தது. இந்த காயம் எண் 1ல் இருந்து 1 செ.மீ.க்கு கீழாக இருந்தது.

4) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 21செ.மீ.x1 செ.மீ. மூளை வரையிலான ஆழத்தில் இடது முன் பக்க வாட்டு தலை பகுதியில் காணப்பட்டது. இந்த வெட்டு காயம் அதன் கீழ் உள்ள தசைகள் தலை எலும்புகள் மற்றும் மூளையை வெட்டி இருந்தது. இந்த காயத்தின் வழியாக மூளை வெளியில் வழிந்து கொண்டிருந்தது. இந்த காயம் காயம் எண்.3ல் இருந்து 0.5 செ.மீக்கு கீழாக இருந்தது.

5) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 7 செ.மீ.x1 செ.மீ. எலும்பு வரையிலான ஆழத்தில் இடது பக்க கன்னத்தில் காணப்பட்டது.. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள் ரத்தக்குழாய்கள் மற்றும்

எலும்புகளை வெட்டி இருந்தது.

6) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 14 செ.மீ.x1 செ.மீ. எலும்பு வரையிலான ஆழத்தில் இடது பக்க கீழ் தாடை மற்றும் கீழ் உதட்டில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள் ரத்தக்குழாய்கள் மற்றும் எலும்புகள் மற்றும் பற்களை வெட்டி இருந்தது.

7)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 22 செ.மீ.x1 செ.மீ. மூளை வரையிலான ஆழத்தில் இடது பக்க கன்னத்தில் இருந்து இடது பக்க பக்கவாட்டு தலை வரை காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள் ரத்தக்குழாய்கள் மற்றும் எலும்புகள் மற்றும் மூளையை வெட்டி இருந்தது.

8)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 11 செ.மீ.x1 x 2 செ.மீ. ஆழத்தில் இடது பக்க மேல் புறத்தில்உள்ள கழுத்து பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள முக்கிய தசைகள் நரம்புகள் ரத்தக்குழாய்கள் வெட்டி இருந்தது.

9) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 4 செ.மீ.x1 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க தோள்பட்டையில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள முக்கிய தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

10)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 7 செ.மீ.x3 x3 செ.மீ. இடது பக்க கை புஜத்தில் வெளிபகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

11) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 9 செ.மீ.x2செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க கை புஜத்தில் பின்பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது. இந்த காயம் இடதுகை முட்டியில் இருந்து 7 செ.மீ. மேலாக இருந்தது.

12) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 9 செ.மீ.x2செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க கை புஜத்தில் பின்பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது. இந்த காயம் காயம் எண்.11ல் இருந்து 2 செ.மீ.க்கு கீழாக இருந்தது.

13) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 16 செ.மீ.x6 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது முன் கையின் முன் பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

14) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 11 செ.மீ.x4 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது முன் கையின் பின் பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

15) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 7 செ.மீ.x1 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க மணிக்கட்டின் பின் பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

16) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 5 செ.மீ.x 2 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க மணிக்கட்டின் வெளி பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

17) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 4 செ.மீ.x 1 செ.மீ. x 1 செ.மீ. அளவில் இடது உள்ளங்கை மற்றும் விரல்களில் காணப்பட்டது.

18) குத்துகாயத்தின் அளவு 1 செ.மீ. x 1 செ.மீ. x 1 செ.மீ.அளவில் இடது பக்க கீழ் பக்க நெஞ்சு பகுதியில் காணப்பட்டது.

19) குத்துகாயத்தின் அளவு 1 செ.மீ. x 1 செ.மீ. x 1 செ.மீ.அளவில் இடது பக்க வெளி பக்க வயிற்று பகுதியில் காணப்பட்டது.

20) வெட்டு காயத்தின் அளவு 2 செ.மீ. x 1 செ.மீ. x 1 செ.மீ.அளவில் இடது பக்க இடுப்பில் காணப்பட்டது.

21) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 11 செ.மீ.x 3 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க தொடைபகுதியில் மேல்பக்க வெளி பகுதியில் காணப்பட்டது. அதிலிருந்து கோடு போன்ற காயம் உட்புற பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

22)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 14 செ.மீ.x 3 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க தொடை பகுதியில் மேல்பக்க வெளி பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது. இந்த காயம் காயம் எண்.21ல் இருந்து 2 செ.மீ கீழாக இருந்தது.

23) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 5 செ.மீ.x 2 செ.மீ. x 5 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க தொடையின் நடு பகுதியின் வெளி பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது. இந்த காயம் காயம் எண்.22ல் இருந்து 4 செ.மீக்கு கீழாக இருந்தது.

24)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 16 செ.மீ.x 4 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க தொடையின்வெளி பகுதியில் நடுபக்கத்தில் காணப்பட்டது. அதில் இருந்து கோடுபோன்ற காயம் அதன் உட்புறமாக காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது. இந்த காயம் காயம் எண்.23ல் இருந்து 5 செ.மீக்கு கீழாக இருந்தது.

25)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 10 செ.மீ.x 1 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க தொடையின் வெளி பகுதியில் கீழ் பக்கத்தில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது. இந்த காயம் காயம் எண்.24ல் இருந்து 10 செ.மீக்கு கீழாக இருந்தது.

26)சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 4செ.மீ.x 2 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க கால் முட்டியின் வெளி பகுதியில் காணப்பட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள் நரம்புகள், ரத்தகுழாய்கள் மற்றும் எலும்புகளை வெட்டி இருந்தது.

27) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 14செ.மீ.x 4 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது பக்க முன் காலில் மேல் பகுதியில் காணப்பட்டது.

28) சாய்வான பிளவுபட்ட வெட்டு பட்ட காயம் 6செ.மீ.x 2 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் வலது உள்ளங்கையில் காணப்பட்டது. இந்த காயம் வலது பக்க 3வது விரலை வெட்டி துண்டாக்கி இருந்தது.

29) சிராய்ப்பு காயங்கள் கீழ் கண்ட பாகங்களில் காணப்பட்டன.

18செ.மீ.x 2 செ.மீ.அளவில் இடது பக்க முன் தோள்பட்டையில், 4செ.மீ.x 3 செ.மீ. அளவில் இடது பக்க பின்பக்க தோள்பட்டையிலும், 12 செ.மீ.x 1 செ.மீ. அளவில் இடது பக்க கை புஜத்தின் வெளி பகுதியிலும், 22செ.மீ.x 2 செ.மீ. அளவில் இடது பக்க வயிற்றின் வெளி பகுதியிலும் மேலும் பல்வேறு வெவ்வேறு அளவிலான சிறு சிராய்ப்பு காயங்கள் இடது பக்க கை, தோள்பட்டை, இரண்டு கை புஜங்கள், நெஞ்சு பகுதி, வயிற்று பகுதி மற்றும் இரண்டு தொடை பகுதிகளிலும் காணப்பட்டன.

6) தலையை திறந்து பார்க்கையில் தலை தோல் முழுவதும் கன்றி இருந்தது. தலை எலும்புகள் பல்வேறு துண்டுகளாக உடைந்துமேற்சொன்ன காயங்களின் கீழாக வெட்டுபட்டு உடைந்து காணப்பட்டது. 12 செ.மீ.நீளத்தில் தலை எலும்பு உடைவு வலது பக்க தலை எலும்பில் காணப்பட்டது. பெருமூளை மற்றும் சிறுமூளை முழுவதும் ரத்தகசிவு இருந்தது. பெருமூளையின் அடிபகுதியில் ரத்த கட்டுகள் காணப்பட்டது- இடது பக்க பெருமூளை சிதைந்து மிருதுவாக காணப்பட்டது. மூளை வீக்கத்துடன் இருந்தது,.

7) மற்ற உடல் உள் உறுப்புகளான இதயம் அதன்ரத்த குழாய்கள் இயல்பான நிலையில் இருந்தது. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது. இரைபையில் 200 கிராம் பகுதி அளவு செரித்த சமைத்த உணவு பொருள் காணப்பட்டது.அதில் இருந்து பழ வாடை வீசியது. அதன்உட்சவ்வு வெளிறி இருந்தது. நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான நிலையிலும் அதன் குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறி இருந்தது. சிறுகுடலில் 20 மில்லி அளவில் பழுப்பு

நிற திரவம் இருந்தது. அதில் இருந்து பழவாடை வீசியது. அதன் உட்சவ்வு வெளிறி இருந்தது. சிறுநீர் பையில் 10 மில்லி அளவில் சிறுநீர் இருந்து. முதுகு தண்டுவட எலும்பு நல்லநிலையில் இருந்தது. உடல் உள் உறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

8) இறப்பானது பிரேத பரிசோதனைக்கு முன்பாக 12 ல் இருந்து 24 மணி நேரத்திற்குள்ளாக இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என கருத்து தெரிவித்தேன்.

9) ரசயான பகுப்பாய்வு அறிக்கையில் உடல் உள் உறுப்புகளில் மீத்தேல் ஆல்கஹால் கண்டறியப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

10) இறப்பிற்கான காரணம் இறந்தவர்அவருக்கு ஏற்பட்ட பல்வேறு வெட்டு காயங்களினால் இறந்திருக்ககூடும் என பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் இதுதான்.அது அ.சா.ஆ.17 ஆகும். ரசாயன பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.18 ஆகும். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை இதுதான்.அது அ.சா.ஆ. 19ஆகும்.

12) என்னிடம் காட்டபடுகின்ற ஆயுதங்களால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு.

11) ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தபோது ஆயுதங்களை காட்டி விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

2) அருவாளில் கூர்மையான பகுதியால் வெட்டும்போது ஒழுங்கான வெட்டு காயம் ஏற்படுமா என்றால் வெட்டுகின்ற நபரை பொறுத்தும், ஆயுதத்தை பொறுத்தும் இறந்த நபரின்அசைவை பொறுத்தும் இருக்கும்.

3) கூர்மையான அருவாளின் முனை பகுதியால் வெட்டுபடும்போது ஏற்படும் காயத்திற்கும் வாளின் கூர்மையான பகுதியால் வெட்டுபடும்போது ஏற்படும் காயத்திற்கும் வித்யாசம் இருக்கும் என்றால் சரிதான்.

4) என்னிடம் காட்டப்படும் வாளால் வெட்டப்பட்டால் காயத்தின் ஓரபகுதியில் ஒழுங்கற்று காணப்படும்.

5) என்னிடம் காட்டப்படும இந்த வாளினால் வெட்டப்படுமபோது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லைஎன்றால் மேற்படி வாளின் முனை பகுதியால் வெட்டும்போது காயம் எண்.18 மற்றும் 19 ஏறப்ட வாய்ப்பிருக்கிறது. மற்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. அதே வாளின் மையப்பகுதியால் வெட்டப்பட்டால் காயம் எண்.18,19 ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். வாளின் கூர் முனையால் குத்தும்போது காயம் எண்.18 மற்றும் 19 ஏற்படும். காயம் எண்.18 மற்றும் 19 ன் நீளம், அகலம், ஆழம் 1

செ.மீ. அளவில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த வாளால் குத்தும்போது ஆழத்திற்கும் அகலத்திற்கும் வேறுபாடு ஏற்படும் என்றால் குத்தும் நபரின் வேகம், இறந்த நபரின் அசைவுகள் ஆகியவற்றை பொறுத்து அமையும். அந்த வாளால் குத்தும்போது குத்தப்படும் நபர்அசைந்தால் காயத்தின் அளவுகள் மாறுபடும் என்றால் சரிதான். காயம் எண்.29 ஒரு நபர் தரையில் விழுந்து புரளும்போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. காயம் எண்.29 அருவாளால் ஏற்படுத்த வாய்ப்பு இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்